559

உ

பரமபதி துணை.

ஸ்ரீ சுந்தர மகாலிங்கக் கடவுள்
திருக்கோவில் கொண்டெழுந் தருளிய

சதுரகிரி

# மகுத்துவக்கும்மி

இஃது

மதுரை புதுமண்டபம் புக்ஷாப்
இ. ராம.
குருசாமிக் கோனாரவர்களால்
இயற்றியதை

ஷையார் குமாரர்

கு. இராமசாமிக் கோனாரால்

மதுரை வடக்குமாசிவீதி,
ஸ்ரீ ராமச்சந்திரவிலாச
அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப் பெற்றது.

Rigistered Copy Right

1923 [0-4-0

ெ 23:38'21
N23
17925l

உ

பரமபதி துணை

## ஸ்ரீ சுந்தர மகாலிங்கக் கடவுள்

## திருக்கோயில் கொண் டெழுந்தருளிய

# சதுரகிரி மகுத்துவக் கும்மி.

காப்பு வெண்பா

சீரார் சதுரகிரிச் செய்ய மகாலிங்கர்
ஏரார் திருவடிக்கே இன்பமுடன்—பேராருஞ்
செந்தமிழாற் கும்மிசொலச் சிந்துரநல் லிந்துநுதற்
கந்தமதத் தெந்தைபதங் காப்பு

கும்மி

சீர்கொண்டி லங்குஞ் சதுர கிரியின்
சிறப்பையா னந்தக்கும் மிப்பாட
ஏர்கொண்ட தும்பிவி நாயகன் பொற்பத
மேற்றியெந் நாளும் பணிவேனே. (1)

சித்தர்கள் போற்றுஞ் சதுர கிரிவளர்
தேசிகன் மேற்கும்மி யான்பாட
முத்தர்க ளுக்குமுன் ஞானநிலை சொன்ன
முருகன் பொற்பதங் காப்பாமே. (2)

பாரோர் புகழுஞ் சதுர கிரிவளம்
பண்புடன் கும்மித் தமிழ்ப்பாட
சீரோங்கு மீஸ்வர னீஸ்வரி பாதத்தைத்
தினமும் போற்றிப் பணிவேனே (3)

அன்பர்கள் போற்றுஞ் சதுர கிரியான்மேல்
லானந்தக் கும்மித் தமிழ்ப்பாட
இன்பமுஞ் செல்வமு மெல்லோர்க் குந்தரும்
இலட்சுமி நாயகன் காப்பாமே. (4)

உச்சித மான சதுர கிரிதனில்
உகந்து மாடுகள் தான்மேய்த்து
இச்சை யுறும்பச்சை மாலுக்கு நற்பத
மீய்ந்த மகாலிங்கர் தாள்துணையே (5)

செகத்தோர் மெச்சுஞ் சதுர கிரிவளர்
தேசிகன்மே ற்கும்மிப் பாட்டுரைக்க
மகத்துவ மாகவ கத்தியர் பூசிக்க
மாலிங்க சுந்தரர் காப்பாமே. (6)

இந்தச் சதுர கிரியின் மகத்துவம்
எல்லோரும் பாடித்து தித்திடவே
சிந்தை மகிழ்வாய்தென் கூடற் குருசாமி
செந்தமி ழாற்சொன்ன கும்மிதன்னை (7)

பாடிநான் சொல்லி வருகிறே னென்றிதோ
பாக்கிய லட்சுமி யுந்தானுங்
கூடிக் குலாவியே கும்மி படித்திடுங்
கூட்டத்திற் சொல்லத் துணிந்தாளே. (8)

மாணிக்க வல்லி மதுர வல்லி நல்ல
மங்கள வல்லி யமுதவல்லி
ஆணிப் பொன் னாபர ணங்களிட்டிங்கனம்
அன்புட னெல்லோரும் வாருங்கடி (9)

சந்தனம் பன்னீருங் கு ப்பூசவ்வாது
சம்பங்கி வாடை கமகமென
இந்து நுதல்தனிற் செந்தூரப் பொட்டிட்டு
எல்லோரு மிங்கனம் வாருங்கடி (10)

வாருங்கொடி பெண்காள் வாருங்கொடி நீங்கள்
மாமலர்க் கொண்டையிற் சூடுங்கடி
பாரிற் புகழ்பெற்ற மாமகா லிங்கரைப்
பணிந்து கும்மி யடியுங்கடி (11)

காலோடே கால்களைச் சேர்க்கா மல்நீங்கள்
கட்டின சேலை கசங்காமல்
மேலோடே மேல்க ளுரசாமல்மிக
மேன்மையாய்க் கும்மியடியுங்கடி (12)

சதுர கிரிதனில் ரோட்டுகள் போட்டதைத்
தக்க படிவரு ணிப்பாக
மதுர மாகநான் சொல்லி வருகிறேன்
மங்கைய செல் லாருங் கேளுங்கடி. (13)

நாற்சது ரமென்ன வேதன் மகிழ்ச்சியாய்
ஞானிலத் துள்ளோர் மிகப்புகழ
வாரப்பிடம் போலக் கிரிகள மைத்ததால்
மாசது ராசல மென்றழைத்தார். (14)

எங்கும் புகழுமக த்தியர் நந்தீசர்
இன்னும் புலகதியர் ராமதேவர்
கொங்கணர் சுந்தர் மச்சர் குருராஜர்
கோரக்கர் ப்ரம்மர் உரோமரிஷி. (15)

சட்டையர் காலாங்கி யூகி திருமூலர்
தன் வந்த்ரி போகர் புசுண்டருடன்
திட்டமா யிப்பதி னெண்சித்தர் யாவருந்
திரமாய் மெய்த்தவஞ் செய்யுமலை (16)

மல்லிகை முல்லை யிருவாச்சி செண்பக
மாமலர்த் தென்றலுலவுமலை
நல்லசம் பங்கிசெவ் வந்திரோஜா மலர்
நாளு மணங்கமழ் கின்றமலை. (17)

சொல்லற் கரிய கனைவிரு க்ஷத்துடன்
சோதி விருக்ஷ மிருக்கு மலை
நல்ல சுணங்க விருக்ஷமுடன் கரு
நாரத்தை செல்லி வளருமலை. (18)

பத்தி பத்தியாக ரோம விருக்ஷங்கள்
பாங்கா யிருந்து வளருமலை
சித்தி தருமழு கண்ணி தொழுகண்ணி
சேர்ந்திருக்கும் ஞானச் சித்தர்மலை. (19)

பறவைக் கீரியும் பறவைப் பாம்புடன்
பறவை யோணை முதலாகப்
பறவைப் பூனையும் பறவைச் செந்துக்கள்
பலவும் வாழ்கயி லாசமலை (20)

அந்தமா யன்னங் குயில்கள் மயில்களும்
அன்புடன் தன்னிசை கொண்டிருந்து
விந்தையாய்க் கொஞ்சிக் குலாவி யிருப்பதை
விமலி கண்டானந் திக்குமலை. (21)

புலி கரடிகள் மான்மரை பன்றிகள்
புல்வாய் மதகரி சிம்மமெனும்
வலிமை பெற்ற மிருகமநேகங்கள்
மகிழ்ந்துலாவுமயேந்த்ரமலை. (22)

ராவண யுத்தத்தில் ராமனுக்காகமுன்
நல்லசஞ் சீவிமலை கொணர்ந்து
தாவியநுமான் பின் கொண்டுடன் போகையிற்
றுன்கொஞ்சம் வீழ்ந்தசஞ் சீவிமலை. (23)

சஞ்சீவி மிக்கவி ருக்குமலை மனச்
சஞ்சலம் யாவையும் போக்குமலை
மஞ்சு படர்ந்து வளரு மலையுமர்
வானவர்வாழுங் குபேரமலை. (24)

சந்தனமாமகா லிங்கரின் தீர்த்தம்பொற்
சந்திர தீர்த்தம் ப்ரம்ம தீர்த்தம்
இந்திரன்மெச்சுங் கவுண்டின்யதீர்த்தமோ
டினிய மஞ்சளுற் றின் தீர்த்தம். (25)

மிக்கவித் தீர்த்தங்க ளுற்றிடு மாமலை
மேருவைப்போன்ற இடபமலை
தக்கசிவலிங்க மானமலைசித்தர்
தனித்தவசுகள் செய்யுமலை. (26)

தீராப்பிணிதீர வேணதலங்களிற்
தீர்த்தங்களாடித் தீரதவர்கள்
நோய்ச்சதுர கிரிக்குசென்றோர்தாம்
நீராட நோய்கள் பறந்திடுமே. (27)

மங்கள மாகம காலிங்கர் வாழ்ந்திடும்
மகிழ்ச்சி கண்டும கிழுமலை
எங்கும் புகழ்பெற்ற சுந்தா லிங்க
ரிருந்தகற் காட்சிகொ டுக்குமலை. (28)

தத்துவ வேத மு ணர்ந்தமு னிவர்க்குச்
சைதன்ய ப்ரபப நிலைகாட்டி
அத்தவி தத்தைத டி பதேசஞ் செய்திடும்
ஆனந்த வல்லியி ருக்குமலை. (29)

ஆச்சியென் னைக்ஷிமீ னைக்ஷிபா யுற்பவித்
தன்புற்ற மெய்ஞ் ஞான பூரணியாம்
பேச்சியாய் வந்துச துரகி ரிதனிற்
பேணியி ருக்கும்பி ரமாமலை. (30)

கச்சித மாகம காலிங்கமூர்த் திச்சுக்
காவல் புரியப்ப லாவடியில்
உச்சித பாயருள் பெற்றக ருப்பணன்
ஓங்கிவ ளர்ந்தேயி ருக்குமலை. (31)

முத்திக்கு வித்தாய்மு ளைத்தெழு சந்தன
மூர்த்திம காலிங்கர் தன்னைமுனஞ்
சித்திபூ சித்தப்பின் சார்ந்தமு னிவரைத்
தான் பூசிக் கச்செய்த மேருமலை. (32)

உள்ளன்பு கொண்டுபி ரமனமைத்தாப்போ
துள்ள சஞ்சீவி மலைமேலே
வெள்ளைப்பி ளையார் திருக்கோயில்கொண்டருள்
வேணடி யிருக்கும் விமலமலை. (33)

வேதமு டிவறி ஞானசவுந்தா
வித்தகராஞ் சத்த கன்னியர்கள்
சாதக மாய்மண மாமலர் கொய்திடத்
தான்வந்த மர்ந்திடுஞ் சோதிமலை. (34)

மலைய ரசன்மகள் கலியாணத்தில்
வடகோ டிமிகத் தாழ்ந்ததினல்
நிலைபெறு தற்க கத்தியர்வந்தங்கு
நேர்மையாய் வாழுமா னந்தமலை. (35)

ஆனந்த சுந்தரன் செய்யுந்தவசுக்கு
அன்புற்றுக் காட்சித லையீய்ந்து
மோனந்த ரூபாலி ரட்டைலிங்கேசராய்
முளைத் தெழுந்த ரூம் மூர்த்திமலை. (36)

எத்தலஞ் சென்றங்க நேகவருடங்க
ளிருந்து மேதவஞ் செய்பவனை
இத்தலந தன்னிலி ருந்தொரு நாட்டவ
மெய்தினோ ரப்பலன் றனடைவார். (37)

மாதவர் வாழுஞ்ச துரகிரியென்று
வாயினுமிலார் மூறை சொன்னோர்கள்
தீதணு காமலே வேண்டுப்புகழ்பெற்றுச்
செல்வத்து டனேயி ருப்பார்கள். (38)

அந்தர தேவர்கள் போற்றுமா லிங்கரை
அன்பாய்நினைந்துமே வாய்திறந்து
சுந்தர யாமகா லிங்கமென் றோர்முறை
சொன்னோர் சுகம்பெறறு வாழ்வார்கள். ()

நல்லபூமி பொருளாபர ணங்களெந்
நாளும்வேண்டு மென வேண்டினைப்போர்
வல்லசதுரகிரி மகாலிங்கரை
வந்துதெரிசிக்கப் பெற்றிடுவார் (40)

மக்களை வேண்டிவ ருந்திய மானிடர்
மாலிங்கர் பாதார்ப தம்பணிந்து
சுக்கிர வாரவி ரதமி ருந்திடிற்
சுகிர்த மக்களைப் பெற்றிருப்பார். (41)

இன்னுமநேகவி சேடங்கள் யாவையும்
என்னொரு நாவாற்கூ றவெளிதோ
நன்னய மானமகாலிங்கற்புதம்
நான்கொஞ்சஞ் சொல்லுவேன் கேளுங்கடி (42)

ஆடியம் மாவாசை மூன்றுநா ளுற்சவ
அற்புத மற்புத மென்னசொல்வேன்
நாடியமாவாசைக் கோர்தினமுன்ன தாய்
நானாபி ஷேகஞ் செய்தபின்பு (43)

பட்சமுடனெழில் முத்துச் சொருகுடன்
பாங்குய ராபர ணங்களிட்டு
இச்சையுடன்பல புஷ்பவலங்காரம்
எம்பெரு மானுக்குச் செய்தவுடன் (44)

சங்கு சேகண்டிமு ழக்கமொடுமிகு
சம்ப்ரமமாகநை வேத்தியமும்
எங்கும்புகழ்ந்திடத் தூபதீபங்களும்
இனிமையாய்க்கொடுத் தப்பணிவார் (45)

மறுபொ ழுதமாவாசைத னிலருள்
மாலிங்கருக்கபி ஷேகஞ்செய்து
அறுகு டன்வில்வஞ் சாதிமலர்களா
லர்ச்சித்துத் தூபதி பங்கொடுத்து (46)

சித்தர்முனிவர்த போதனர்மெச்சிடச்
சேகண்டிசங்குமு ழக்கமுடன்
பத்தமு டன்சிவ முநறமா லிங்கர்க்குப்
பாங்குறப் பூசைசெய் தேபணிவார (47)

மற்றுமூன் றுநாளில் முப்பழஞ் சாத்திப்பின்
மங்களமாயபி ஷேகஞ்செய்து
உற்றமேதார் நாகாபரணவ லங்காரம்
உண்மையாய்ச்சாத்திப்பூ சைமுடிப்பார் ()

வனம்வாழ் தேவதா பூசைமு டித்தபின்
வந்தவ ரெல்லோரும் போற்றுவர்கள்
இனமாய்ச் செய்திடும் நாதபூ சைபதன்
இயல்பு கண்டும கிழ்வார்கள் (49)

இப்பெரு மேலாங்கிரியி லிருந்து
இனியநற் தீர்த்தங்கள் தானூட
செப்பமு டன்வெகு கோடி ஜனங்கள்
சிறப்பாக வந்தும காலிங்கரை. (50)

கண்டுத ரிசித்திட வருவோர்வழிக்
கஷ்ட மிறந்துமப் பாதைவழி
பண்டு வளமைபோற் பத்தியை முன்னிட்டுப்
பண்புடன் வாராதைக் கேளுங்கடி (51)

மலைச் சரிவோரம் பாதை யொருமுழம்
வாய்ந்திடுங் குன்று காடுகளில
நிலைத்திரு க்குஞ்செ டியுந்த ருக்களும்
நிறைந்து நிற்கின்ற கானல்தனில் (52)

கும்பு கும்பாகரல் தாவிநட க்தாப்போற்
கூடியே போகமு டியாமல்
எம்பெரு மானரு ளாலந்தப் பதையில்
ஏகுவ தைக்கேளுந் தோழியரே. (53)

இச்சிறு பாதையிற் பையப்பை யமிக
ஏறிவழி யேநடந்து வந்து
பச்சம தாகவே கோவிலுக்கு வந்து
பாங்காயி ருப்பார்கள் தோழியரே. (54)

மலையிற்றி ருடுபோ காமற் காத்திடமுன்
மன்னும் அதிகாரிகள் பலபேர்
நிலையில் லாவழி வந்து கண்டும் ரோட்டை
நேராகப் போடவுந் தேடவில்லை (55)

எத்தனை யோசிமான் எத்தனை யோபூமான்
எத்தனை யோகோடிப் பேர்கள் வந்தும்
இத்தனை நாள்வரை அத்தனை பேர்களும்
இப்பாதை யைக்கவ னிக்கவில்லை. (56)

நல்ல தோர் தேவஸ்தா னத்ததி காரரும்
நாட்டமா யவ்வழியே நடந்தும்
வல்லப மாகநல் ரோட்டுகள் போட்டிட
மனத்துள் நாளுஞ்சிந் திக்கவில்லை (57)

இப்படி வாய்வெகு கோடிகா லமவரை
இருந்த தவ்வழி யெல்லோரும்
தப்பித மில்லாமல் வந்து தரிசனை
தான்செய்து வந்தனர் தோழியரே. (58)

துந்துமி யானவருடம திலமேலோர்
சொல்கின்ற ஆடிமா தந்தனிலே
வந்திடும் கல்லாரா வாசை யிலேயெங்கள்
மாஜிஸ்ட்ரேட் வந்ததைக் கேளுங்கடி (59)

துஷ்ட நிக்ரகம தைமுடிக்க விக்கத்
தொல்லுல கில்வந்த வதரித்து
சிஷ்ட பரிபால னஞ்செய்ய மேஸ்திரட்டார்
செய்திடும வல்லபங் கேளுங்களடி. (60)

பூமான் துரைசாமி நாயுடவர்களும்
போலீசு மின்ஸ்பெக் டருடனே
சீமான்கள் மெச்சிடத் தானிப்பா றைதனிற்
சேர்ந்த யாவரும் வந்திருந்தார் (61)

நல்லதோர் தானிப்பா றையிலி ருந்தங்கு
நாடிய கோயில்வ ரைதானும்
மெல்லச் சனங்கள்ந டக்கின்ற விந்தையை
மிக்க கவனமாய் மேஸ்திரட்டார் (62)

கண்டிந்தப் பாதைநேரில்லா ததும் வழிக்
கஷ்டமி ருப்பதையுந் தெரிந்து
பெண்டு பிள்ளைகளிப் பாதையி லெப்படிப்
பேணிவ ருவரென மதித்து. (63)

திட்டம தாகவே சானு மலையேறிச்
சேர்ந்து மனமகிழ்வாக மிக்க
சட்டம தாய்க்கோவி லோரமா யமைத்த
சம்பிரம ஆபிஸை நாடிவந்தார் (64)

ஆங்காங்கு போலீசு பந்தோப ஸ்துச்செய்து
அன்புட னேவந்தி ருந்தபின்பு
பாங்காக யீசனைக் கும்பிட வந்தோர்கள்
பண்புற வேமகிழ் வாய்ச்சாகை. (65)

செய்தவ னந்தனி லேயிருந்தார் சாதஞ்
சீராய்ச்ச மையல்கள் செய்த பின்னர்
உய்யம னைவிமக் களோடி ருந்தங்கு
உண்டிருந்து போவோர் தய்யிடத்தில் (66)

தோகை மலையி லிருக்க குறவருஞ்
சொல்கின்ற பக்காத் திருடர்களும்
வேகமா யவ்விடம் வந்துதி ருடிட
வேண்டுமென் றெண்ணியே வந்திருந்த (67)

திருடர்கள் யாவரும் போலீஸ் பாராவினாற்
றிருட்டுச் செய்யமு டியாமல்
பெரிய உற்சவம் புரட்டாசி மாதம்
பெலமாய் வேணத டிப்போமென்று (68)

நவராத் திரியி லெல்லோ ரும்வந்து
நாட்டமாய் வேண்டுந்திரவியங்கள்
அவசிய மாய்த் திருடநி னைந்ததை
அன்புடன் மாஜஸ்ட்ரேட்டாறிந்து (69)

கட்டாய மாகப்பு ரட்டாசி மாதத்திற்
கணக்காய்ப் போலீசு பந்தோபஸ்து
திட்டம தாகநே மித்திட வேமிகு
சீராக யோசனை தான்புரிந்து. (70)

தேட்டமு டன்பின்ம காலிங்க நாதரைத்
தெரிசித்து மகிழ்ந் தெல்லோரும்
தாட்டிக மாகக்கிரியி லிருந்துபின்
தக்கதோ ருசிலம் பட்டிவந்து. (71)

மன்னர் கவர்னர் துரைராஜன் போர்ட்டு
மன்னர்பு கழும்பி ரகாசன்
நன்னய மாகவேகள்ளர்க்குப் போதனை
நாட்டியே நல்வழி காட்டி யின்னும் (72)

பிரமலைக் கள்ளர்தி ருட்டினை மாற்றிடப்
பேணியே பூமித னிற்பிறந்து
திரமாயக் கள்ளர்கள் ராஜாவென் றேசொல்லத்
தெரியக் கைத்தொழில் கற்றுவைத்த (73)

எங்கள்ரா ஜாவைய ரவர்க ளிடத்தி
லினிமை யாகவே தான்பேசி
மங்கள மானதோர் கேஸைவி சாரித்து
மகிழ்ச்சி யாயிருக் கும்பொழுது (74)

திருக்கூட் டந்தனக் கன்னம லித்திடும்
சீமான்கு ழந்தையா னந்தருந்தான்
மருவில் லாததோர் மாஸ்திரட்டாரிடம்
வார்த்தைகள் சொன்னதைக்கேளுங்சடி (75)

வரும்புரட்டாசி மாதத்த மாவாசை
மறுநாள் தன்னிமேல காப்புக்கட்டி
உருவா யானந்த வல்லியின் பூசையி
னூற்சுவ மொன்பது நாள்வரையும் (76)

பூசை செபதப நேமநிட் டையுடன்
பூரண மாகச் செய்துமுடித்து
ஆசையு டன்முளைப் பாரிகள்வேணது
அன்பாகப் போட்டு வளர்த்துவைத்து (77)

ஒன்பதா நாளெழி லானந்த வல்லிமுன்
னூற்ற பலகார வர்க்கங்களும்
தென்புடன் வைத்து மலைபோற்குவித்தூடன்
தேங்காய் பழங்கள் மிக நிறப்பி (78)

பூவாலே பந்தல லங்கரித்து மணப்
பூமலர் மாலைபொன் னுடையிட்டு
தேவாதி யெச்சக வராத்தி ரிப்பூசை
செய்து முடித்த மறுநாளில் (79)

கோடான கோடிப்பேர் கும்மியடித்திடக்
கூட்டமாய்ப் பெண்கள் குலவையிட
வாடாத புட்பத்தை வாரியிரைத்துமுன்
வைத்தமு ளைப்பாரி யைத்தூக்கி (80)

ஆனந்த வல்லிக்க லங்காரஞ் செய்துநல்
லன்பா யெழுந்தரு ளச்செய்துடன்
வானவர் மெச்சும் வனங்களைச் சுற்றியே
மகிழ்வா யசற்றோரம் வந்திருந்து (81)

கும்மிய டித்துல் லாசமாய்ப் புகழ்ந்து
கூறுமு ளைப்பாரி யாவையுமே
செம்மையு டன்கவுண் டின்னிய தீர்த்தத்திற்
சேர்த்துக்கு லவைவயிட் டுன்னதமாய் (82)

அம்மனுக் குத்தூப தீபங்கொ டுத்துமே
ரம்புபோட் டுப்பின்னர் மங்கையர்கள்
கும்மிய டித்துவ ரமுழக் கமுடன்
கோயிலுக் குள்வந்து யாவர்களும் (83)

தேங்காயு டைத்துப் பழங்கள்வைத் துநல்ல
தீர்த்தங்கொ ளித்துப்பூ சைபுரிந்து
பாங்காகத் தோத்திரங் கள்பலசெய் துமே
பண்புட னேமகிழ்ந் தேயிருப்பார் (84)

இந்தப்ப டியாக ஆனந்த வல்லிக்கு
ஏற்றதி ருவிழா தானடக்கும்
அந்தஅ மாவாசை நாள்முத லாயெங்க
ளாண்டவ னுற்சவஞ் சொல்லுகிறேன் (85)

மாமகா லிங்கர்த னக்கொவ்வொரு நாளும்
மகிழ்வாய பிஷேகஞ் செய்தருளி
சேமக மாகத்தின மோரலங்காரம்
சேர்மயாய்ச் சூட்டிம னமகிழ்வார் (86)

பச்சமு டனேதா னென்பது நாட்களும்
பகவான் திருவிளை யாடல்தனை
இச்சையு டனேந டத்தியே காண்பித்து
ஏற்றதோர் பூஜைகள் தான்முடிப்பார் (87)

பத்தாகா ளுற்சவ மூன்றுதி னம்வரை
பார்க்கத் திகட்டாத அற்புதங்கள்
மூத்தாப ரணவலங் காரங்கள்மிகு
மோடியதாக விருக்குமையா (88)

சித்தன்க ருப்பண சாமிக்கு கந்திடுஞ்
செம்மறி யாட்டுக் கடாய்களையே
பத்தமுடன் பலி செய்யு மகிமையை
பார்த்தெண்ணிச் சொல்ல முடியாதே (89)

வாத்தாற்பெற்ற குழந்தைகள் தங்கட்கு
மகிழ்ச்சியாய் முடி தானிறக்கி
சிறப்பாய்க் காணிக்கை யுண்டியலிற் போட்டுச்
செல்வங்கள் பெற்றிருப் போரனந்தம் (90)

ஆடித்தீர்த் தத்தின்தி ருவிழாவுக்குமே
லாயிரம் பங்கதி மேன்மையென்று
தேடிவெகு ஜனங்கோடி கோடியாக
சேர்ந்து வருவர்தி ரள்திரளாய் (91)

அச்சம யத்திற்றி ருடரநேகம்பேர்
ஆங்குதி ருடிப்பி ழைப்பார்கள்
பச்சமாய்ப் போலிசார் பந்தோபஸ் திட்டிடிற்
பண்ணுந் திருடுகள் போகாது (92)

என்றவர் சொன்னவி ஷயங்கள் யாவையும்
இன்புற்றுக் கேட்டநம் மேஜஸ்ட்ரேட்டர்
அன்றதற் கானதோ ராலோசனைகளை
அன்புறச் செய்து முடித்தவுடன் (93)

தரணியோர்க்குப காரங்கள் செய்யிந்தத்
தாலூகா போர்டுப்பி ரசிடெண்டுந்
திரமாய் டிஸ்திரிக்கோர்ட் டுக்குமெம்பராய்ச்
செனித் துதவிபு ரிந்திடவே (94)

வேதமே நாயக ஞானவிப் பூவினுள்
மேலான பாக்கியம் பெற்றுவந்த
வேதநாயகத் தேவர வர்களை
மேஸ்திரட்டார்கண்டு தான்பேசி (95)

நவராத்தி ரிக்கொலுப் பந்தோபஸ்துக்காக
நல்லபு ரட்டாசி மாதமதில்
தவம்போ லீர்பத்துத் தேதியில் மேஸ்திரட்டார்
தன்னுடன் வந்தோரைச் சேனுங்கடி (96)

எட்டுப் போலீஸின்ஸ் பெக்டருத்தியோக
ரின்னுமித ர ஜனங்களுடன்
தாட்டிக மாகவே தாணிப்பாறைதனில்
தான்வந்தி ருந்தன ரப்பொழுது (97)

அஞ்சாத நெஞ்சராம் வஞ்சத்தி ருடரை
ஆக்கினை செய்சர்க்கிளின்ஸ்ஃப் பெக்டர்
வஞ்சமில் லாராஜுப் பிள்ளையவர்களும்
வந்துதானிப்பாறை வீற்றிருந்தார் (98)

மேனிமி னுக்காக வந்ததிருடரை
வேண்டிப்பி டிக்குமின்ஸ் பெக்டரெனுஞ்
சீனிவாசனு காயுடு அவர்களுஞ்
சிறப்பாய் வந்தங்கு தானிருந்தார் (99)

தற்சனர் தங்களை யச்சமு றச்செய்
துலாச்சாமி ஐயர வர்களுந்தான்
சற்சனர் மெச்சிட சப்இன்ஸ்பெக்டராய்த்
தான்வந்தி ருந்தனர் தோழியரே (100)

இத்தனை பேருடன் மேஸ்திரட் டாபீஸில்
எல்லோரு மெச்சிட வேலைசெய்யும்
புத்திமான் கோபால ஐயர வர்களும்
புகழ்பெற் றோங்கிட வந்திருந்தார் (101)

சதுரகிரிதனிற் பானக்கத் தர்மங்கள்
சம்பிரம மாகவே செய்துவரும்
மதுரைப் புத்தகவர்த்தக மென்மேலாய்
வாஞ்சையு டனே நடத்துகிற (102)

குருசாமிக் கோனவ்வுத்தி யோகஸ்தர்க்குக்
கோவின்பால் நெய்தயிர் வெண்ணெயுடன்
தருவித்துக் கொடுத் தங்கிருந்துவேண்டுஞ்
சமான்கள் தந்துகொண் டேயிருந்தார்(103)

சாமான்கள்தன்னுடன் சர்க்கரைப்பிள்ளையுந்
தம்பிபட் டிவர்ம்பெ ரியோருங்
கோமான்கு முந்தையா னந்தசுவாமியுங்
கூடியி ருந்தார்சந் தோஷமதாய் (104)

அரியச துரகி ரிமகா லிங்கர்க்கு
அன்புடன் பூசை புரிந்துவரும்
பெரிய சாமிபூ சாரிம கிழ்வுடன்
பேணியே வந்தங்கு வீற்றிருந்தார் (105)

உசிலம் பட்டிதனி லிருந்துமுகாம்
உற்றக கூவிக்கார ரெல்லோரும்
வசமாய்ச் சாகூழிகள் தம்முடனேயங்கு
வந்திருந்தார் தானிப் பாறைதனில் (106)

இப்படியா யந்தத்தா னிப்பாறைதனில்
எல்லோரும் வந்துயிருந்த பின்னர்
செப்பமதாகமேஸ் திரட்டார்கச்சேரி
செய்ததைக் கேளுங்கள் தோழியரே (107)

தானிப்பா றைதனிற் கேசுக்காரர்களைத்
தக்கபடி கூப்பிட் டப்பொழுதே
மாநிலம் புகழக் கேஸைவிசாரித்து
வாயிதாப் போட்டு அனுப்பியபின் (108)

கூட்டங்கூட் டமாயங்கிருந்த கிராமத்தார்
கூடியொரு புறமாக வந்து
நாட்டமு டனவர்பேசிய சங்கைகள்
நன்மையாய்ச் சொல்லிடக் கேளுங்கடி (109)

வல்லது ரைசாமி நாயுடு அவர்களும்
மகிழ்வா யுசிலம் பட்டியினில்
நல்லமேஸ் திரட்டாய் வந்திருந்தபின்னர்
நன்மைகள் செய்ததை,யென்ன சொல்வோம் (110)

ஊரிற்றிருடுகள் போகாமற் கள்ளரை
யெடுக்கிச் செல்வாக்கு டனிருந்து
நேரிற்கேசுகள் விசாரித்துத் தீர்ப்புகள்
நேர்மையாய்ச் செய்ததைக் கண்டோர்கள் ()

அதிகக் கண்டிப்புக் காரரென்பர்சிலர்
அன்புக்கு டையவ ரென்பர்சிலர்
மதியி னூற்றறி யறிந்து கேஸதில்
மாட்டிடு வாரென்று சொல்வர்சிலர் (112)

உச்சிதமாகத் திருட்டுகள் செய்வோரை
உண்மை யுடன்கண்டு தான்பிடித்து
கச்சித மாகக்கண் டித்ததி காரத்தால்
கணக்காய் நல்லவ ராக்கிவைத்தார் (113)

சப்பாத்துக் கள்ளிகள் ஊருக்குள்ளாகவே
தானேமு ளைத்துஇ ருந்ததைப்பின்
அப்புறப் படுத்திக் குப்பைகூளங்களை
யள்ளியெ றியும்படிக்குச் செய்தார் (114)

உசிலம்பட்டியை நன்னக ராகவே
உற்றபடி செய்து வைத்தபின்பு
கசிவாய்க் கள்ளர்க்குப் புத்தியைப்போதித்துக்
கண்டிப்பா யாபாரி யாக்கிவைத்தார் (115)

குளங்கள் கூபங்கள் தூர்ந்துகிடந்ததை
கூடியமட்டுந் தண்ணீர் வரவே
களங்கமில் லாமல்வெ ட்டியேதர்மத்தைக்
கருதி நன்றாயுண் டாக்கி வைத்தார் (116)

புத்திமான்கள் செய்த சோயில னந்தங்கள்
பூசையில் லாமலி ருப்பதுவை
நித்தியம் ஆறுகா லப்பூசை நடக்க
நேர்மையாய்த் தீபங்களேற்றச்செய்தார்(117)

சிறு குழந்தைகள் படித்துமேன்மையாய்ச்
சீர்பெறப் பள்ளிக்கூ டங்கள்கட்டி
மறுவில் லாததோர் வாத்தியார் நேமித்து
வாகாகக் கற்பிக்கச் செய்துவைத்தார் (118)

குடிகள் யாவருந் தான்பிழைக் கச்சந்தைக்
கூட்டத்தி னுள்ளேபோய்த் தானுழைந்து
படின மாகத்தி ராசுப்ப டிக்கல்லும்
பண்பா யளக்கும்ப டிகளையும் (119)

வேண்டிக்க வனித்துக் கள்ளப்ப டிகளை
விந்தையாய்க் கண்டுட னேபிடித்துக்
காண்டகு புதிய முத்திரை போட்டங்கு
கணக்கா யளக்கச் செய்துவைத்தார் (120)

சந்தைக்குள் மச்சமு மாமிசமுமிகத்
தக்கதோர் காய்கறி வர்க்கமுடன்
சிந்தை மகிழ்வாக ஓரிடத்தில்யாவுஞ்
சேர்ந்துமே விற்பனை செய்துவந்தார். (121)

எங்களெசமான் அச் சந்தையைப் பார்த்துடன்
ஈதென்ன வாச்சர்ய மென்றுசொல்லி
அங்கங்கு வெவ்வேறாய் ப்ளாக்குகள் பிரித்து
அன்பாக வியாபாரஞ் செய்யவைத்தார் (122)

வேலைக்குப் போகாத சோம்பேறி கள்பலர்
வேணுமென் றேஜக்து லாப்பதனிற்
காலையி ருந்துபின் மாலைவ ரையினுங்
கால்களை நீட்டிப்ப டுத்துறங்கி. (123)

கூச்சலிட் டேவிளை யாடுமத் துஷ்டரைக்
    கூர்மையாய் மேஜிஸ்திரேட் டார்பார்த்து
தாட்சண் யமில்லாமல் லாம்பிற்குச் செல்லாமல்
    தக்கதோர் வேலைக்குப் போகச் செய்தார் ()

தினமுங் கேசுவி சாரித்துப் பிராதுகள்
    செம்மையு டன்வாங்கிக் கொண்டுமரைக்
கணமுஞ் சும்மாயி ராமலக்கேசையுங்
    கண்டிப்பாய்த் தீர்ப்புகள் செய்திடுவார். ()

கஷிக்கா ரர்களால் குறுக்கு ரோட்டில்லாக்
    கஷ்டத்தைக் கேட்டு அவர்களிடம்
உச்சித மானதோர் ரோட்டுகள் போட்டிட்
    டொழுங்காய்நல்வழி காட்டிவைத்தார் (126)

அந்தந்தப் பக்கத்தி லுள்ளகி ராமத்தார்
    யாவருங் கூட்டங்கள் தான்கூடி
விந்தைய தாகவே பாதைகள் வெட்டியே
    மேடுபள் ளங்களை யேநிறப்பி. (127)

கும்மல்கும் மலாகக் கற்சர ளைகளைக்
    கொண்டுவந் தங்குநி றப்பியேதான்
செம்மண் சரளையை மேற்போட் டுப்பெருந்
    திம்சுக ளாற்போட்ட ரோட்டதைக்கேள்

உசிலம் பட்டியி ருந்துநி லக்கோட்டை
    யுற்றரவ் தாவினி லேபொருந்த
சுசிவா யனுமான் கோவில்வ ரைரோட்டு
    கணக்காய்ப் போட்டதை யென்ன சொல்வேன் ()

எல்லோரு மெச்சவு சிலம்பட் டியிருக்
தெழும லைவரை ரோட்டுகளை
சல்லாப மாகவே தான்போட் டுப்பின்பு
தான் செய்த வேலைகளைக் கேளும் (130)

அப்புவி மெச்சவு சிலம்பட் டியிருந்
தானை யூர்க் கோயில்வ ரையிலுந்தான்
சம்பமு டன்ரோட்டுப் போட்டுயி ருப்பதைத்
தான்கண்டோர் தேகம்பூ ரித்திடுவார் (131)

தக்கவு சிலம்பட் டியிருந் தபுத்தூர்ச்
சாமிகோ யில்வரை ரோட்டுகளை
முக்கிய மாகவே இஞ்சினீ ரும்பார்த்து
முன்போட்ட ரோட்டுக்க திகமென்றார் ()

இப்படியாகவே ரோட்டுகள் போட்டிட்ட
எங்களைச மான்முன் னெல்லோருஞ்
செப்பம தாகச்ச துரகிரிரோட்டு
தீரமாய்ப் போட்டிட வேணுமென்று (133)

எல்லோரும் வேண்டியே சொன்னதுக்காவிப்போ
எங்கள் தருமதுரை தானும்
உல்லாச மாகவே காளைபேரோட்டுகள்
உடனே போட்டு முடிப்பரென்று (134)

வந்தஜனத்துடன் மாத்தூர் ஜனங்களும்
மாமகா ராஜபு ரத்தோரும்
சந்தோஷக் கொண்டாடும் தம்பிபட்டியின்
ஜனங்களுங் கிருஷ்ணா புரத்தோரும் (135)

மரியாதையுட னெல்லோ ரும்வந்து
மாஜஸ்ட் ரேட்டாரை மிகவணங்கி
அரியமலையிது பெரிய ரோட்டுகள்
அழகாய்ப் போட்டிட வேணுமென்று ()

விரும்பிக் கேட்டிட மேஸ்திரட்டாரப்போ
மிகவுமன மகிழ்ச்சி கொண்டு
தருமத் துக்காகநீங் களுரிமையாய்த்
தான்வந்து வேலைகள் செய்வீரேல் (137)

கோவில் மலைபடி வாரம் வரைரோட்டைக்
கூசாமற் போட்டு முடித் திடலாம்
மேவிய வண்டிகள் கார்களுலாவிடும்
மேலான தர்மங்கி டைக்குமென்று (138)

சொன்னவுடனே யவர்கள் நல்லதெனச்
சூழ்ந்திங்கு வேலைக்கு வாரோமென்றார்
நன்னயமா கவேமேஸ்தி ரட்டார்கண்டு
நாளைக்கு எல்லோரும் வாங்களென (139)

சொல்லிய னுப்பிய பின்புமேஸ் திரட்டார்
சுறுக்காய் ரோட்டுகள் போடுதற்கு
நல்லச மையமி துவென்று ஈசரின்
நற்பதம் போற்றிம னமகிழ்ந்து (140)

இந்தச்ச மையம்போ லெந்தச் சமைய
மினிவரப் போகுதெ னமதித்து
விர்தையு டனுயர் தேவஸ்தா னத்தினில்
வேண்டுஞ்சா மான்களை வாங்குதற்கு (141)

சாதனந் தான்பெற்ற குழந்தை யானந்த
சாமியார் தன்னைய ருகழைத்து
நூதன மாகவே ரோட்டுகள் போட்டிடும்
நோக்கத்தைக் கூறிச்சா மான்சேர்க்க (142)

வேணுமென் றதையச் சாமியார் கேட்டு
விரும்பிய ரோட்டுகள் போடுதற்குக்
காணுஞ்சா மான்களை வாங்குதற் கப்போது
கணக்கப் பிள்ளைய வர்களையும் (143)

மேவுமி ரசக்க நாயக்கர் தம்மையும்
வேண்டிய னுப்பவவ்வி ருவர்களும்
ஆவலு டன்கடப் பாரைமண் வெட்டிகள்
அரிவா ளோடு பிக்காச்சிகளும் (144)

கோடாலி யோடுவாய்ச் சாத்துச்ச முட்டியுங்
குந்தளங் கூடைக ளும்வாங்கி
நாடுஞ்சு ரங்கத்தின் கம்பிகளுங் கல்லில்
நாட்டி யுடைக்கு முளிகளையும் (145)

ஒன்றுஞ்சு ரங்கக்க ருமருந் தும் அங்கு
உற்றவே லைக்காரர்க் கன்னமிடப்
பாங்கா யரிசிப ருப்புடன் காய்களும்
பாக்கி யில்லாமல நேகமுள்ள (146)

சாமான்கள் வேணதெல் லாம்வாங்கி எங்கள்
சப்மேஜஸ்ட்ரேட்டார் முன் வைத்திடவே
பூமானும் பார்த்தும னமகிழ்ச் சிகொண்டு
பூரித்தங் குள்ளமற் றேருடனே. (147)

தக்கவா லோசனை தான்முடித் தேவேண்டித்
தன்னைமுன் கேட்டோருக் காளனுப்ப
பக்கக்கி ராமத்தி லேயிருந்து வந்தோர்
பாங்கையா னென்சொல்வேன் தோழியரே()

வீடுத வராம லொவ்வொரு வருநல்
விந்தையாய் வேலைக்கு வந்துநிற்க
கூடுஞ்ச னங்களின் கூட்டத்தைப் பார்த்தோர்கள்
கோடிச னமென்று சொன்னார்கள் (149)

எல்லாச்ச னங்களி னெண்ணிக்கை பார்த்திடி
லீரைந்தி ராயிர மாஞ்சனங்கள்
வல்லமை யாகமேஸ் திரட்டார் சொற்படி
வாங்கினார் கைகளி லாயுதங்கள் (150)

இனிமை யாய்வந்தோ ராயுதங் கள்தன்னை
யெடுத்தெ சமான்முன் நின்றிடவே
கனிவாய் ரோட்டுகள் வெட்டுமி டங்களின்
கணக்குச் சொன்னதைக் கேளுங்கடி (151)

வண்டியின் பண்ணைத னிலிருந்து மேற்கில்
வண்டிகள் போய்வரும் ரோட்டிடமும்
அண்டியப் பாதையைச் செப்பனிட் டுப்பிள்ளை
யார்கோவில் தானிப்பா ரைமடமும் (152)

கடந்துக ருப்பண சாமிமுன் பாதையைக்
கண்டுகு திரைகுத் திப்பாரை
படர்ந்த கானலும் ஆறும்ப சுப்பாதை
பட்சமு டனேகு டமுருட்டி (153)

கம்பியின் பாறையு மேல்மலை யாறையுங்
கடந்து அத்தியூற் றுக்குவந்து
சம்பமு டன்கண பதிக்கு கைதனைத்
தாண்டிக்கோ ரக்கர்குண் டாவிருந்து (154)

பசுமிதிப் பாரையி ரட்டையி லிங்கமும்
பசுக்கி டைகவ்வ லூற்றிடத்தில்
வசிக்குங் கானலுஞ் சின்னப்ப சுக்கிடை
வந்துப லாவடி தானிருந்து (155)

கருப்பண சாமிவ னப்பேச்சி பாரையுங்
கடைவீ திகளுந் தான்கடந்து
விருப்ப மாயீசன் கோயில்வ ரைநீங்கள்
விரும்பிப் பாதைகள் போடுமென்று (156)

நூறுபேர் கட்கொரு மேஸ்திரி நேமித்து
நுண்மைய தாய்ரோட்டு வேலைசெய்ய
நேருநேராக வேயூகம் வகுத்தாப்போல்
நிறுத்திப்பா தைவெட் டும்போது (157)

வெட்டும்பி டமங்கு கட்டுக்கட் டென்னமண்
வெட்டிகு தித்ததைக் கண்டெஜமான்
திட்டமாய் வருணஸ்தோத்திரஞ் செய்திடச்
சீராக மாமழை பெய்ததுவே (158)

மலையி லுள்ளதோர் மண்கண்டந் தானெலா
மழையி னால்மிக வேகரைந்து
நிலையாப் பாதைகள் வெட்டுதற் கேதுவாய்
நேராயிருந்ததை யென்னசொல்வேன் (159)

பாதைகள் வெட்டியே வேலைசெய் வோர்களின்
பக்கத்திற் போலீசார் பார்த்திருக்க
வாதைக ளில்லாமல் வேலைந டத்திடு
மார்க்கத்தைக் கேளுங்கள் தோழியரே (160)

பாதைம றைத்தசெ டிகளை வெட்டியே
பாங்குடன் தூரத்தெ றிவோர்கள்
சாதக மாகமண் வெட்டியாற் பாதைகள்
தான்வெட்டு வோர்கள னந்தமடி. (161)

பிக்காச்சி கொண்டுகல் மண்திடல் கல்தன்னைப்
பேர்த்தெடுத் துக்கொண்டு போவோர்கள்
தக்கப டியதைத் தட்டினில் வாரியே
தாணெறி வோர்கள னந்தமடி (162)

கூட்டங் கூட்டமா யநேகர்வ ரிசையாய்க்
கூடிமண் வெட்டியாற் பேர்ப்பதையும்
தேட்டமாய்க் கூடையில் வாரி யெடுத்துடன்
சீராகப் பள்ளத்திற் சேர்ப்பதையும். (163)

கட்டப்பா ரைகொண்டு கற்கள் புரட்டியே
கானலிற் றள்ளிவி டுவதையும்
திட்டமு டனேகற் பாதையுண் டாக்கிடத்
திம்சுகள் போட்டு அடிப்பதையும் (164)

சித்த மகிழ்வாக மேஸ்திரட்டார் பார்த்து
சீராயண்டாக்களிற் றண்ணீர் விட்டு
மெத்தவே சாதம் போட் டுக்கரைத் தூதை
வேண்டுவோர்க்குத்தா வாக்களித்தார் (165)

தாகத்திற்குத் தண்ணீர்க்காவடிகள் போட்டுத்
தண்ணீர்தருவோர் வெகுபேர்கள்
பாகும தாகவே சாதங் கரைத்தங்கு
பசித்தோர்க் கீவோர் சிலபேர்கள் (166)

வேண்டும் பலகாரங் கூடைதனில் வைத்து
மிகவே தருவோர்கள் சிலபேர்
ஆண்டியே வாழைப்ப ழங்கள்கொடுத்துத்
திருசாய் வருவோர்கள் சிலபேர் (167)

வெற்றிலை பாக்குப்பு கையிலை தன்னுடன்
வேண்டு வோர்க்குத்தருவோர்சிலபேர்
பெற்றதோ ராயுதங்கள் மழுங்கிற்பதில்
பின்தந்து வாங்கிடு வோர்சிலபேர் · (168)

கற்களுடைத்திடும் பேர்கள் சிலர் பெருங்
கற்சுரங் கம்போடு வோர்கள்சிலர்
அற்புதமாய்க்கரு மருந்தெடுத்ததை
யன்புடன்போட்டி டிப்போர்கள்சிலர் (169)

சுரங்கத்திற்குக் கருமருந் திட்டபின்
சூழநெருப்பிடச் சூட்சமதாய்ப்
பருவெடிச் சத்தந் தான்கொடுத்துக் கல்லைப்
பாங்குடன் தூக்கிக் கொண்டோடுவது ()

அற்புத மற்புத மென்னசொல் வேன் கற்கள்
ஆகாயம் போய் விழும் வேடிக்கைகள்
தற்பர னுக்குத்தெ ரியுமல்லாமல் அதைத்
தான்கண்ணுற் பார்க்கமுடிந்திடுமோ. (171)

கல்லடிக்கின்ற வுளிமொட்டை யாகிடிற்
காய்ச்சி யுளித்தட்டிப் போடுகின்ற
கொல்வேலை யாசாரி கூட்டங் கூட்டமாகக்
கூடியே வேலைகள் செய்வோர்கள். (172)

உற்ற மண்வெட்டி சம்மட்டி கோடாலிகள்
ஒடிந்து போனதைத் தானெடுத்துச்
சற்றுநேரத் திக்குள் கைப்பிடிகள் போடுந்
தச்சுவே லைக்காரர் தானனந்தம் (273)

பாரமலைபடி வார முதற்கொண்டு
பார்க்கம காலிங்கர் கோயில்வரை
தூரந் துலையென்று வேலைசெய்வோருக்குத்
தோணாமல் ரோட்டுகள் போட்டுவந்தார் ()

எங்கெங்குங்கூட்டங்க ளெங்கெங்குநாட்டங்கள்
எங்கெங்கும் யானைவீ றிட்டதுபோல்
சிங்கங்கள் போல்நின்று வேலைகள் செய்ததைச்
செப்ப வொண்ணாதடி மாதரசே. (175)

இப்படியாய் நல்ல ரோட்டுகள் போட்டதோ
ரியல்பு தெய்வச் செயலாகும்
செப்படி வித்தைபோற் சீக்கிரம் நடந்த
செய்கையை இன்னுஞ்சொல் வேன்தோழி (176)

இந்தப் பெருங்கூட்டத் திற்குச் சாதங்கரி
ஏற்கையாய்ச் செய்திட வேணுமென்று
விந்தையாய்ச் சமைய லந்தணர் செய்திடும்
வேடிக்கை கேளுங்கள் தோழியரே (177)

சாதம்ப தமாய்ச் சமைத்து மலைபோலத்
தானே குவியலாய்ப் போட்டபின்பு
நீத மதாகவே காய்கறி வர்க்கங்கள்
நேர்மையாய் செய்தங்கு வைத்தனரே (178)

வேலைக்கு வந்தோர்க்கு காலையில் சாதமும்
வேண கரியும் மிகப் படைத்து
மாலையுமத்தி யானத்திலுமவ்வித
மகிழ்வாய்ச் சாப்பாடு போட்டதைக்கேள் (179)

ஒவ்வொரு ஜாதிகளாகப் பிரித்து
ஒழுங்காக யூகம் வகுத்தாப்போல்
வெவ்வே றதாயிலை போட்டுத் தனித்தனி
வேண்டிய சாதங்கரி படைத்தார் (180)

சாப்பிட் டிளைப்பாறி வந்தோர் மகிழ்ச்சியைச்
சாற்றிட யாவராற்றுன் முடியும்.
கூப்பிட் டெல்லோருக்கும் பாக்குடன்வெற்றிலை
கொடுக்கச் செய்து மகிழ்ந்திருந்தார் (181)

எத்தனை மண்வெட்டி எத்தனை பிக்காச்சி
எத்தனையோ கட்டப்பாரை கொண்டு
மெத்த மகிழ்வா யிதும்போலிரண்டு நாள்
வேலைநடக்கையில் ரேஞ்சருக்கு (182)

தக்க சாப்பிட்டேர் மகா ராஜ ராஜரின்
சமுகம் வெட்டருந் தான் வரவே
முக்கிய மாகநம் மேஸ்திரட்டார் சபை
முன்பாக லெட்டர் வாசித்ததைகேள் (183)

கல்ஸ்தோர் கானல ழித்துப் புதுப்பாதை
நாடியே வெட்டி விடாமலேதான்
வல்லபமாக முன்னுள்ளபடி யந்த
மார்க்கமாய்ரோட்டுகள்போடுமென்ற (184)

சீரான லெட்டரைமேஸ் திரட்டார்கண்டு
சிந்தையுள் மிக்கமகிழ்ச்சிகொண்டு
நேராகநாம் வந்து பின்பொரு நாள்வேலை
நேர்மையாய்ச் செய்வோமெனக்கூறி [285]

காயிதம் வந்ததாற் பழைய பாதையிற்
கல்லு கரடுகளை யுடைத்து
மாயித வாகச்சனங்களும் போய்வர
வாய்ப்பான பாதையாய்ப் போடுமென்றார் ()

மேஸ்திரட்டார் மனம் போலவே ரோட்டுகள்
வேண்டியே செய்து முடித்தாக்கால்
சாஷ்கமாகவே வண்டிகள் போய்வரும்
சங்கை களினின்னுஞ் சொல்வேன்தோழி ()

திட்டமுடனேமுன் வெட்டிக்கொண்டு வந்த
சீரான பாதை தனிலிருந்து
கட்டாயமாகப் பழைய வழிதனிற்
கற்களுடைத்துச் சுரங்கமிட்டு (188)

கோயில் மலைபடி வாரம் வரையிலுங்
கோடிசூர்யப்பிர காசவொளி
மேவிய காந்தவிளக்குகள் ளாகிலும்
வேண்டியே போட்டுவே லைகள்செய்தார் ()

சின்னப் பசுத்தொழுப் பேச்சிபாறைதனிற்
சீராய்ச்சுரங்கங்கள் போடுமென்று
நன்னயமாக மேஸ்திரட்டார் சொல்லிட
நற்கிராமத்தோர் நடுநடுங்கி. (190)

சுரங்கம் போட்டிட யோசித்துமே பொன்றுஞ்
சொல்லா திருப்பதைக் கண்டெஜமான
திரமாய்ப் பேச்சியைக் கொப்பரையால்மூடி
தெய்வச் செயலாற் சுரங்கமிட (191)

பாறை வெடித்தப்போ துண்டுதுண்டாய்க்கற்கள்
பண்புடனுகாய மேற்படர்ந்து
சாரைசாரையாகப் பலாவடி முன்பு
தான்வந்து வீழ்ந்ததைப் பாருங்கடி. (192)

இந்தப்படியாகக் கோயில்வரையிலு
மிருக்கும் பாறைகளையுடைத்து
சந்தோஷமாகவே கோயிலுக்குள் வந்து
தான்செய்த சங்கதி கேளுங்கடி. (193)

சுந்தரர் கோயில் முதலாற்று வரை
சொல்லமுடியாத பாதைவழிச்
சிந்தனையில்லாமல் யாவரும் போய்வரச்
செய்தபடிக்கட்டை யென்னசொல்வேன் ()

எத்தனைபேர்கள்வந் தாலுமவர்கட்கு
இல்லையென்னுமற் றண்ணீரெடுக்க
சித்தமகிழ்வாகச் சுந்தரர் கோவில் முன்
செய்ததோரூற்றதைத்தான் பாரீர். (195)

சனங்கள் வந்தோரிருந்து சமையல்கள்
தக்கபடி செய் திருப்பதற்கு
வனங்கள் தன்னிற்செடிகளை வெட்டியே
வைத்த யிடங்கள் கணக்கில்லையே (196)

வேலைகள்செய்து முடித்தபின் யாவர்க்கும்
வேண்டு மரியாதை செய்வதற்கு
மாலையும் வாழைப்பழங்களுந் தேங்காயும்
வண்டி வண்டியாகக் கொண்டுவந்து (197)

தேங்காய் பழங்களைச் சாமிக்குமுன்பாகச்
சிறப்பாய் வைத்துப் பூசைபுரிந்து
பாங்காயங் கெல்லோர்க்குங் காக்ஷிதரிசனம்
பண்ணியே வைத்துச் சந்தோஷமதாய் ()

வந்திடும்பேர் களெல்லோருக்குஞ் சந்தனம்
மாலையும் வெற்றிலை பாக்குடனே
சிந்தைமகிழ் வாகத்தேங்காய் பழங்களுஞ்
சீமானிருந்தே கொடுக்கச் செய்தார் (199)

சந்தோஷமாகவே பின்னொரு நாள்வேலை
தானிருப்பதைத் தெரியச் சொல்லி
விந்தையா யாவர்க்குஞ் சாதங்கரிவர்க்கம்
வேண்டிய மட்டும் படைக்கச்செய்து (200)

புகழ்ச் சியோடு அவரவருருக்குப்
போய்வர உத்தரவுங் கொடுத்து
மகிழ்ச்சியாக மேஸ்திரட்டா சாபீசு
வந்திருந்த பின்பு கேஸெடுத்து (201)

கேசைவி சாரித்துத் தீர்ப்புகள் செய்ததை
கேடித்தி டர்க ளும்பார்த்து
நேசமுடனே திருட்டுகள் செய்பாயல்
நேராயவ ரவரூரு சென்றார் (202)

சந்திர ஊப்போல் வந்தமேஜஸ்ட்ரேட்டாரும்
சர்க்கிளின்ஸ் பெக்டரும் போலீசும்
இந்திரனைப் போல்சாமி யைக்கும்பிட்டு
எல்லோரும் உசிலம்பட்டி வந்தார் (293)

அன்று முதல் ரோட்டுப் பாதை பெரிதா
யமைந்ததைக் கண்டுசனங்க ளெல்லாம்
நன்றெனச் சந்தோஷங்கொண்டு அப்பாதையில்
நண்ணியேபெண்டு பிள்ளைகளுடன் (204)

தாராளமாகச் சதுரகிரிவந்து
சாமிதெரிசனை செய்தபின்னர்
சீராயவரவர் ஊரைநாடிவீடு
சேர்ந்திருந்தார் பாருந்தோழியரே (205)

சித்தர் முனிவருக்கும்வாழி கும்மி
செந்தமிழாற் சொன்னோர்க்கும் வாழி
பத்தியாய் ரோட்டுகள் போட்டோர்க்குமிதைப்
பாங்கா யச்சிட்டோர்க்கும் வாழி (206)

சதுரகிரி மருத்துவக் கும்மி

முற்றிற்று.

உ

# வயித்தியப் புத்தக விளம்பரம்.

இராமதேவர் மக்கத்திற்குச் சென்று யாகோபெனப் பெயர் பெற்றுத் திருவாய்மலர்ந்தருளிய சாஸ்திரங்கள்

| | |
|---|---|
| வைத்திய சிந்தாமணி 700 ரும் அதன் சூஸ்திரம் 50 தும் | 1—8—0 |
| ஷை லோகச் செந்தூரம் 300 | 0-12—0 |
| ஷை செந்தூர சூஸ்திரம் 155ம் அதற்குச் சூஸ்திரம் 55ம் | 0-11—0 |
| ஷை சுண்ணக்காண்டம் 600 | 1—4—0 |
| ஷை சுண்ணசூஸ்திரம் 300 | 0-12—0 |
| ஷை சூஸ்திரத்திற்குச் சூத்திரம் 155ம் அதன் சூஸ்திரம் 55ம் | 0-11—0 |
| ஷை பஞ்சமித்திரம் 300 | 0-12—0 |
| ஷை களங்கு 300 | 0-12—0 |
| ஷை வாதவைத்தியம் 400 | 1—0—0 |
| ஷை வைத்தியம் 300 | 0-12—0 |
| ஷை தண்டகம் 110ம் வைத்திய சூஸ்திரம் 55 ம் எடைபாகம் 16ம் செய்பாகம் 16ம் சேர்ந்தது | 0-10—0 |
| மேற்கண்ட பதினேழு சாஸ்திரத்திற்கு அரும்பத உரையும் கல்லாடமூலமும் உரையும் அடங்கியது. | 1—0—0 |
| மகா மருத்துவம்பொருந்திய சதுரகிரித்தலபுராணம் | 2—0—0 |
| ஷை மருத்துவக்கும்மி | 0—4—0 |

இப்படிக்கு

கு. இராமசாமிக்கோன்,

புக்ஷாப் புதுமண்டபம் மதுரை.



மகாலிங்கம்



சுந்தரலிங்கம்